# நவராத்திரி

# தோத்திரப் பாடல்கள்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ துர்க்கைச் சித்தர் அவர்கள் அருளிய

# ராகுகால துர்க்கா

# அஷ்டகம்



வாழ்வு ஆனவள் துர்க்கா வாக்கு மானவள்
வானில் நின்றவள் இந்த மண்ணில் வந்தனள்
தாழ்வு அற்றவள் துர்க்கா தாயும் ஆனவள்
தாபம் நீக்கியே என்னைத் தாங்கும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே.

உலக யீன்றவள் துர்க்கா உமையுமானவள்
உண்மையானவள் எந்தன் உயிரைக் காப்பவள்
நிலவில் நின்றவள் துர்க்கா நித்யை யானவள்
நிலவி நின்றவள் எந்தன் நிதியம் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே.

செம்மை யானவள் துர்க்கா செபமு மானவள்
அம்மை யானவள் அன்புத் தந்தை யானவள்
இம்மை யானவள் துர்க்கா இன்பமானவள்
மும்மையானவள் என்றும் முழுமை துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிரு மானவள் துர்க்கா உடலு மானவள்
உலக மானவள் எந்தன் உடைமை யானவள்
பயிரு மானவள் துர்க்கா படரும் கொம்பவள்
பண்பு பொங்கிட என்னுள் பழுத்த துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெயதேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே.

துன்ப மற்றவள் துர்க்கா துரிய வாழ்பவள்
துறையு மானவள் இன்ப தோணியானவள்
அன்பு உற்றவள் துர்க்கா அபய வீடவள்
நன்மை தங்கிட என்னுள் நடக்கும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே.

குருவு மானவள் துர்க்கா குழந்தை யானவள்
குலமு மானவள் எங்கள் குடும்ப தீபமே
திருவு மானவள் திருசூலி யானவள்
திரு நீற்றில் என்னிடம் திகழும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராகு தேவனின் பெரும் பூஜை ஏற்றவள்

ராகு நேரத்தில் என்னைத் தேடி வருபவள்

ராகு காலத்தில் எந்தன் தாயை வேண்டினேன்

ராகு துர்க்கையே என்னைக் காக்கும் துர்க்கையே

தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே

தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே.

கன்னி துர்க்கையே இதயக் கமலத் துர்க்கையே

கருணைத் துர்க்கையே வீரக் கனக துர்க்கையே

அன்னை துர்க்கையே என்றும் அருளும் துர்க்கையே

அன்புத் துர்க்கையே ஜெய துர்க்கை துர்க்கையே

தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ துர்க்கா ஸ்தோத்திரம்

ஜெயஜெய தேவி ஜெயஜெய தேவி
துர்க்காதேவி சரணம்
ஜெயஜெய தேவி ஜெயஜெய தேவி
துர்க்காதேவி சரணம்
துர்க்கையம்மனை துதித்தால் என்றும்
துன்பம் பறந்தோடும்
தர்மம் காக்கும் தாயாம் அவளை தரிசனம்
கண்டால் போதும்
கர்ம வினைகள் போகும் சர்வமங்களம் கூடும்
(ஜெயஜெய தேவி)

பொற்கரங்கள் பதினெட்டும் நம்மை சுற்றிவரும்
பகை விரட்டும்
நெற்றியில் குங்குமப் பொட்டு வெற்றிப்
பாதையைக் காட்டும்
ஆயிரம் கரங்கள் உடையளவளே
ஆதிசக்தி அவள் பெரியவளே
(ஜெயஜெய தேவி)

சங்கு சக்கரமும் வில்லும் அம்பும் மின்னும்
வாளும் வேலும் சூலமும்
தங்கக் கைகளில் தாங்கி நிறபாள் - அம்மா தாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கத்தின் மேல் அவள் வீற்றிருப்பாள்
திங்களை முடிமேல் சூடிநிற்பாள்
மங்கள வாழ்வும் தந்திடுவாள் மங்கையர்கரசியும்
அவளே அங்கையர்க்கண்ணியும் அவளே

ஜெயஜெய தேவி ஜெயஜெய தேவி
துர்க்காதேவி சரணம்
ஜெயஜெய தேவி ஜெயஜெய தேவி
துர்க்காதேவி சரணம்
கனக துர்க்கா தேவி சரணம்.

## ஸ்ரீ மகாலஷ்மி

விதிதரு முனிவர் விண்ணோர் வேண்டுதற்
கருள்வாய் போற்றி
நிதிகலை நிலவளங்கள் நீர்சொரித்
தணைப்பாய் போற்றி
பதிவளர் அமுதமாகிப் பாற்கட லுதித்தாய் போற்றி
துதிபெற மாயன் நெஞ்சத் துணையே போற்றி போற்றி

செங்கமல மீதிருக்கும் இலட்சுமியம்மா
செல்வநலம் தந்திடுவாய் இலட்சுமியம்மா
மங்கலப் பொன் வாழ்வருள்வாய் இலட்சுமியம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிதருவாய் கதிதருவாய் இலட்சுமியம்மா
சந்தான விஜயகஜ இலட்சுமியம்மா
தனதான்ய ஆதிவீர இலட்சுமியம்மா
சந்தோஷ ஐஸ்வரிய இலட்சுமியம்மா
சகலலோக ரட்சகியே இலட்சுமியம்மா

வெற்றிலையில் திலகமிட்டோம் இலட்சுமியம்மா
விளக்கேற்றி மாலையிட்டோம் இலட்சுமியம்மா
உற்றதுயர் தீர்ப்பாயே இலட்சுமியம்மா
ஒளிமயமாய் வாழ்வருள்வாய் இலட்சுமியம்மா

## சரஸ்வதி பாடல்கள்

வெள்ளைத் தாமரைப் பூவில் இருப்பாள்
வீணை செய்யும் ஒலியில் இருப்பாள்
கொள்ளை யின்பம் குலவு கவிதை
கூறும் பாவலர் உள்ளத் திருப்பாள்
உள்ள தாம்பொருள் தேடி யுணர்ந்தே
ஓதும் வேதத்தின் உள்நின் ளொளிர்வாள்
கள்ள மற்ற முனிவர்கள் கூறும்
கருணை வாசகத் துட்பொரு ளாவாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதர் தீங்குரற் பாட்டில் இருப்பாள்

மக்கள் பேசும் மழலையில் உள்ளாள்

கீதம் பாடும் குயிலின் குரலைக்

கிளியின் நாவை இருப்பிடங் கொண்டாள்

கோதகன்ற தொழிலுடைத் தாகிக்

குலவு சித்திரம் கோபுரம் கோவில்

ஈதனைத்தின் எழிலுடை யுற்றாள்

இன்ப மேவடி வாகிடப் பெற்றாள்.

## சக்தி நாமாவளி

சுத்தசக்தி சுத்தசக்கி சுத்தசக்தி ஓம் சிவம்

சுத்தசக்தி சுத்தசக்கி சுத்தசக்தி ஓம் சிவம்

சத்தியஞான தர்மசக்தி சாந்தசக்தி ஓம் சிவம்

சச்சிதானந் தர்மசக்தி சர்வசக்தி ஓம் சிவம்

வீரதீர ஸ்தர்யசக்தி விஜயசக்தி ஓம் சிவம்

தாக மோக சோகாகித துர்க்கா சக்தி ஓம் சிவம்

துஷ்டசத்ரு நாகசக்தி துர்க்கா சக்தி ஓம் சிவம்

அஷ்ட லக்சுமி ஞானவாணி அமரசக்தி ஓம் சிவம் (சுத்த)

குஞ்சிதபத அபயஹஸ்த வாஞ்சித பலதாயகம்

குருபரசிவ ஹரஹரநட ராஜசுத்த சக்திஓம் (சுத்த)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகலகலா வல்லி மாலை



## காப்பு

ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்
ஏக உணர்விக்கும் என் அம்மை - தூய
உருப்பளிங்கு போல்வாள் என் உள்ளத்தின் உள்ளே
இருப்பள் இங்கு வாராது இடர்.

படிக நிறமும் பவளச்செவ் வாயும்
கடிகமழ்பூந் தாமரைபோற் கையும் - துடிஇடையும்
அல்லும் பகலும் அனவரத மும்துத்தாற்
கல்லுஞ் சொல்லாதோ கவி?

வெண்டா மரைக்கன்றி நின் பதந்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாது கொலோ
சகமேழு மளித்
துண்டா னுறங்க வொழித்தான்பித்தாக
வுண்டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலாவல்லியே. 01



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடும் பொருட்சுவை சொற்சுவை

தோய்தர நாற்கவியும்

பாடும் பணியிற் பணித்தருள்வாய்

பங்க யாசனத்திற்

கூடும் பசும்பொற் கொடியே

கனதனக் குன்றுமைம்பாற்

காடுஞ் சுமக்குங் கரும்பே

சகல கலாவல்லியே. 02

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு

தார்ந்துன் னருட்கடலிற்

குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ

லோவுளங் கொண்டுதெள்ளித்

தெளிக்கும் பனுவற் புலவோர்

கவிமழை சிந்தக்கண்டு

களிக்குங் கலாப மயிலே

சகலகலாவல்லியே. 03



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த

கல்வியுஞ் சொற்சுவை தோய்

வாக்கும் பெருகப் பணித்தருள்

வாய்வட நூற் கடலுந்

தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந்

தொண்டர் செந் நாவினின்று

காக்குங் கருணைக் கடலே

சகல கலாவல்லியே. 04

பஞ்சப் பிதந்தரு செய்யபொற்

பாதபங் கேருகமென்

நெஞ்சத் தடத்தல ராததென்னே

நெடுந் தாட்கமலத்

தஞ்சத் துவச முயர்த்தோன்செந்

நாவு மகமும் வெள்ளைக்

கஞ்சத் தவிசொத் திருந்தாய்

சகலகலா வல்லியே. 05



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்ணும் பரதமுங் கல்வியுந்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்
காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங்
கனலும் வெங்காலு மன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே. 06

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல்கா
யுளங் கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா
லமுதந் தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள்ளோதிமப் பேடே
சகல கலாவல்லியே. 07


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்விற் பனமுமவ தானமுங்

கவி சொல்லவல்ல

நல்வித்தை யுந்தந் தடிமைகொள்வாய்

நளினா சனஞ்சேர்

செல்விக் கரிதென் றொருகால

முஞ்சிதை யாமைநல்குங்

கல்விப் பெருஞ்செல்வப் பேறே

சகல கலாவல்லியே. 08

சொற்கும் பொருட்கு முயிராமெய்ஞ்

ஞானத்தின் றோற்றமென்ன

நிற்கின்ற நின்னை நினைப்பவர்யார்

நிலந் தோய்புழைக்கை

நற்குஞ்சரத்தின் பிடியோ

டரசன்ன நாணநடை

கற்கும் பதாம்புயத்தாளே

சகல கலாவல்லியே. 09



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய்வாய்
படைப்போன் முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்டேனும்
விளம்பி லுன்போற்
கண்கண்ட தெய்வமுளதோ
சகல கலாவல்லியே. 10

உ

சிவமயம்

## அபிராமிப்பட்டர் அருளிய
## அபிராமியம்மை பதிகம்
## காப்பு

தூயதமிழ்ப் பாமாலை சூட்டுதற்கு மும்மதநால்
வாயைங் கரன்றாள் வழுத்தவாம் - நேயர்நிதம்
எண்ணும் புகழ்க்கடவூர் எங்களாபி ராமவல்லி
நண்ணும்பொற் பாத்தில் நன்கு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல்

கலையாத கல்வியும் குறையாத வயதுமோர்

கபடுவா ராத நட்பும்

கன்றாத வளமையும் குன்றாத இளமையும்

கழுபிணியி லாத உடலும்

சலியாத மனமும்அன் பகலாத மனைவியும்

தவறாத சந்தா னமும்

தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்

தடைகள் வாராத கொடையும்

தொலையாத நிதியமும் கோணாத கோலுமொரு

துன்பமில் லாத வாழ்வும்

துய்யநின் பாதத்தில் அன்பும்உதவிப் பெரிய

தொண்டரொடு கூட்டு கண்டாய்

அலையாழி அறிதுயிலு மாயனது தங்கையே!

ஆதிகட வூரின் வாழ்வே!

அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!

அருள்வாமி! அபிராமியே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பக் கல்வியில் தேர்ச்சி பெற்ற முன்னணி
ஆசிரியர்களால் தயாரிக்கப்பட்ட எமது வெளியீடு

# தயா வெளியீடு
## வெற்றி இலக்கு

மாணவர்கள் பரீட்சையில் அதிக புள்ளிகளைப் பெற
சிறந்த வழிகாட்டி

**தரம் 1, 2, 3, 4, 5** வரை பயிற்சி பரீட்சை
வினாத்தாள்கள் தவணைப் புத்தகங்கள்
வெளிவருகின்றது.

தொ.இல: 0773965214 021 2219483

நவீன பிறிண்ட் மூலம் சகல விதமான அச்சு வேலைகளும்
நீண்ட கால அனுபவமுள்ள முன்னணி நிறுவனம்

# சிவ தயா அச்சகம்

கொம்பியூட்டர் ஒப்(செற்) பிறிண்டேர்ஸ்

இல.362 கே.கே.எஸ்.வீதி, மனோகரா தியேட்டர் முன்பாக
நாவலர் சந்தி, யாழ்ப்பாணம்



உங்கள் சகலவிதமான அச்சுவேலைகள் அனைத்தும்
பாடசாலைக்குரிய சகல வேலைகளும், தனியார் நிறுவனங்களுக்கு
வேண்டிய பில் புத்தகங்கள், லேபிள் வகைகள், அழைப்பிதழ்கள்,
நினைவு மலர் எதுவானாலும் சிறந்த முறையில் குறைந்த
செலவில் குறித்த தவணையில் செய்து கொள்ள
எம்மை நாடுங்கள்.....

இல. 92(150) நாவலர் றோட், யாழ்ப்பாணம்
தொ.இல: 0758353682

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org